உ

கடவுள் துணை.

குடியர் ஆனந்தப்பதமும்

கெஞ்சாவின் ஆனந்தக்களிப்பும், புகையிலையின் வெண்பாவும்,

அடங்கியிருக்கின்றன.

சென்னை-குளை.

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

கடவுள் துணை.

குடியர்கள் பேரில்

ஆனந்தப்பதம்.

காப்பு.

கலிவிருத்தம்.

அத்திமுகவனை பத்தியுடனேயான்
நித்தியமனதில் வைத்துவணங்கினேன்.

குடியர் துதி-விருத்தம்.

விடியாலெழுந்து துடியாநடந்து
படியாலளந்து குடியாதிருந்தால்
வெடியாதுவென்று துதியாகசொன்னேன்
மடியாதவெங்கள் கணநாதனே.

ஆனந்தப்பதம்.

என்ன ஆனந்தம்பார் இந்தக்கள்
எள்னென்ன ஆனந்தம்பார்
மன்னிர்புகழ்திரு சென்னைநகர்தனில்
சின்னயமாஞ்செங்கான் கடைத்தெருவினில்

சொன்னமொழிதவ றாமல்நடக்கின்ற
    வுன்னிதமாம்நயினி யப்பன்கடைக்கள்ளு   என்

ஆண்டபுரண்டபகி ரண்டமுங்காணுது
    மண்டலமெங்கும் சுழன்றிடத்தோணுது
கண்டகண்டகடையில் காண்கிடச்செய்யுது
    காசினிதன்னிலே பேசிடச்செய்யுது   என்

பட்டஞ்சுசோமனைக் கட்டவுஞ்செய்யுது
    பாரில்மன்னவர்க்கு விற்கவுஞ்செய்யுது
சண்டைக்குவாரம்பந் தான்மிகச்செய்யுது
    தாடையில்ரண்டறை வாங்கவுஞ்செய்யுது   என்

காதுக்கடுக்கனை விற்கவுஞ்செய்யுது
    கண்டவருக்கெல்லாம் வார்க்கவுஞ்செய்யுது
காரியமாய்க்கள்ளைக் குடித்திடவுஞ்செய்யுது
    கண்டவர்களா லுதைபடச்செய்யுது   என்

காற்பணங்கள்ளைக் குடித்திடச்செய்யுது
    கையிலகதிதோசை வாங்கிடச்செய்யுது
ஐயமில்லாமலே யுட்கொள்ளச்செய்யுது
    ஆனந்தமாய்ப்பாட்டைப் பாடிடச்செய்யுது   என்

கன்னங்களவுகள் செய்திடச்செய்யுது
கள்ளுக்கடைவெச்சைக் குடுவைவைத்தேடுது
கண்டோர்களைப் பறிக்கவுஞ்செய்யுது
மண்டைமுறிய வடிபடச்செய்யுது என்

தித்திப்புக்கள்ளு தினம்புளித்தகள்ளு
மெத்தகுடித்தால் பித்தந்தலைக்கேறி
சுற்றிசுற்றித்தலையைச் சுழட்டியடிக்குது
தத்துவஞானஞ் சகலமுங்காட்டுது என்

கழுத்துத்தாலியை யறுகக்ச்செய்யுது
காசிக்கடைதனில் விற்கவுஞ்செய்யுது
கண்டசேவகர்கையில் பிடிபடச்செய்யுது
கன்னத்திலடிகள் படவுஞ்செய்யுது என்

குட்டிக்கரணங்கள் போடவுஞ்செய்யுது
கும்பலாய்மன்னரைக் கூட்டவுஞ்செய்யுது
திட்டமாய்சேவகர் வந்துபிடித்தாக்கால்
ஒதுங்கியடங்கி யொடுங்கிக்கிடக்குது என்

பாராளுமன்னரைப் பார்த்திடச்செய்யுது
பங்கப்பட்டபின்பு அங்கமும்வாடுது
தாராளமாய்பாரதம் இரண்டுரூபாய்
தானேகொடுத்திடத் தள்ளியேபோகுது என்

வள்ளலெனுந்துரை ஞாயத்தைக்கேட்டிட
கள்ளைக்குடித்த கசடர்க்குத்தானப்போ
உள்ளபடி சத்தியஞ் சேவகர்செய்திட
உள்ளங்கலங்கியே துள்ளித்துடிக்குது என்

போட்டவபதாரம் ரூபாய்கொடுத்திட
பொருளொன்றுங்கையில் வகையில்லாமல்விட்டால்
வட்டமாய்மண்ணை யெடுத்திடச்செய்புது
மண்வெட்டியைக்கையில் வாங்கவும்செய்யுது என்

கம்பளிமுக்காடு போடவுஞ்செய்யுது
காலில்விலங்கையு மாட்டிடச்செய்யுது
பம்பரம்போல்மண் ணெடுத்திடச்செய்யுது
பத்துநாளும்போனல் விட்டிடச்செய்யுது என்

என்ன ஆனந்தம்பார் இந்தக்கள்
என்னென்ன ஆனந்தம்பார்

குடியர் ஆனந்தப்பதம் - முற்றிற்று.

உ

கடவுள் துணை.

கெஞ்சாவின்

ஆனந்தக் களிப்பு.

இதுவேயானந்தக்கைலாசம் இதற்
கிணையில்லையோவிந்த செகத்தினில்மோசம்

சீரானகெஞ்சாவைவாங்கி பொரு
சிலும்பினிலதைச் சிறப்புடன்வைத்து
பிர்ராமலொருதம் மிழுத்தால் அப்போ
பரமபதத்தினைப் பார்க்கலாம்நாமே

இலைகாம்புவிரைதள்ளவேணும் இதுக்
கேதிரானபிர்மபத்திரி யிலைபோடவேணும்
சிவகங்கை மூன்றுதுளிவிட்டு அதை
சிக்கெனவுண்டையாய்ச் சிலிம்பிலடைத்து
அக்கினிபகவானை மூட்டி யெங்கள்
ஆத்தாள்சிவகாமி யம்மனைநினைத்து
திக்கென்றொரு மூச்சியிழுத்தால் அப்போ
தேவர்களெல்லோருந் திரளுடன்வந்து

என்வரப்போவனுமென்று கேட்பார் எனக்
கெதிராளியில்லாம லிருக்கவேகேட்பேன்

இதுவேபரானந்தக்கைலாசம் இதற்
கிணையில்லையேயிந்த ஜெகத்தினில்மோசம்

கெஞ்சாவின் ஆனந்தக்களிப்பு முற்றிற்று.

உ

கடவுள் துணை.

புகையிலையின் வெண்பா.

கண்புகையும்நெஞ்சுண்ணுருங் கைகாலசைந்துவரும்
வெண்புகையல்மேனி வெளுக்குமே - பண்பாய்கேள்
ஈரல்கருகிவரும் இந்திரியம்நஷ்டமாம்
பாழும்புகையிலையின் பண்பு.

சிவமயம்.

என்னவேடிக்கைப்பார் இப்பதங்கள்
என்னென்ன வேடிக்கைபார்

வீசுப்புகழ்திரு வொற்றியூருச்சவம்
வேடிக்கைபார்க்க வீரபத்திரன்றானும்
ஆவலுடன்வரும் வழியில்தன்னிலே
அன்புடன்யானுமே யிப்பதம்பாடினேன் என்

வரும்வழிதன்னிலே வம்பர்குடியர்கள்
வார்த்தைகளைக்கேட்டு நேர்த்தியதாகவே
திரமுடன்யானுஞ் செய்தேனிப்பதம்
தீர்க்கமாயெல்லோரும் பார்த்துமகிழவே என்

உத்தயவிரங்க சாமியெனுமுதலி
ஒருபதம்பாடென்று இனிமையாய்கேட்கவே
மெத்தமகிழ்ச்சியாய் புல்லறிவாயானும்
மேதினிதனிலிந்த பதங்களைப்பாடினேன் என்

இலக்கணவிலக்கிய மின்பமாய்க்கற்றோர்கள்
இன்னம்பெரியோர்க ளெல்லோரும்பார்த்து
சன்னபிழைகளிருந் தாலுமென்றெனை [னேன்
யேற்றுக்கொள்ளவேணுந் தாழ்மையுடன்சொன்

என்னவேடிக்கைபார் இப்பதங்கள்
என்னென்ன வேடிக்கைபார்

குடியர் ஆனந்தப்பதம் முற்றுப்பெற்றது.